" විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු "
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000
SLSI SYSTEM CERTIFIED ISO 9001
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. දිනය / திகதி / Date 2019/03/06

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 24/2018, 31/2001(XIV), 27/2018 மற்றும் 19/2019 அரச நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் 02/2018 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/02/2019 மற்றும் 2019.02.13 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 2018-09-28 | இலங்கை பொறியியல் சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களை இரண்டாம் மொழித்தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுவித்தல் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 24/2018, 2018-09-07 | சம்பளம் பொருள்கொள்ளல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 31/2001 (XIV), 2018-12-14 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/2018, 2018-12-31 | தாபனக் கோவையின் XII அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 02/2018, 2018-11-28 | களப்பதவி வகைக்குரிய அரச மற்றும் மாகாண அரச சேவை பதவிகள் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

அரசாங்க நிர்வாக சுற்றிக்கை கடிதம் : 02/2018

எனது இலக்கம் : EST 7/ ALLOW/03/2014

அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும்
நீதி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.11.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>வெளிக்கள அலுவலர் வகுதிக்கு உரித்தான அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவைக்குரித்தான பதவிகள்</u>**

வெளிக்களப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, 2017.12.07 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 33/2017 இன் இணைப்பு 01 அல்லது 02 இற்கான பதவிப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் கடமையாற்றும் சகல அலுவலர்களுக்கும், 2014.03.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2014, 2014.06.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2014(I) மற்றும் 2015.06.03 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2014(II) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிக்களக் கொடுப்பனவிற்கான உரித்துடைமை காணப்படுகின்றது.

02. சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிக்களக் கொடுப்பனவிற்கான உரித்துடமை காணப்படும் ஒருசில அலுவலர்களுக்கு அக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை என குறிப்பிடப்படுவதனைக் கருத்திற் கொண்டு இச் சுற்றறிக்கைக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. யாரேனுமோர் அலுவலருக்கு அவ் வெளிக்களக் கொடுப்பனவு செலுத்தப்படுவது தொடர்பாக ஏதேனும் பிரச்சினை காணப்படுவதாயின் அது பற்றி தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவித்து அவசியப்படும் தெளிவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பம்/: ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும்
நீதி அமைச்சு